கட்டுப்பாடுகளை நீக்குவதற்குமுன் கணிசமான அளவுக்கு ஆசிடமுள்ள இருப்புகளை அதிகரித்துக்கொள்ளவேண்டியது இன்றியமையாதது என்பதை மறந்து விடுவதற்கில்லை. தமிழகத்தின் எல்லையிலுள்ள கேரள மாநிலம் மிகவும் பற்றுக்குறை உள்ள மாநிலம் ஆகும். எனவே, வட்டார மண்டலம் அமைப்பது பற்றி சிந்திக்கக்கூட முடியாத நிலை இருந்தது. இருப்புகள் பற்றிய நிலவரங்கள், கொள்முதலை அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் நமது பொறுப்புகளின் அளவு ஆகியவற்றைப் பற்றி நேரடியாகத் தெரிந்து கொள்வதற்காக மாவட்டக் கலெக்டர்கள் மாநாடு ஒன்று கூட்டப்பட்டது. உணவுப் பொருள் குறித்த கட்டுப்பாடு முழுவதையும் எடுத்துவிடுவதோ, வட்டார மண்டல முறையைக் கொண்டுவருவதோ அவசரமும் அபாயமும் நிறைந்த சோதனையாகும் என்றும் இருப்புகளை நன்கு அதிகரிக்கும் வகையில் கொள்முதல் வேலையை முழுமூரமாக்கி அதன் பின்னர் படிப்படியாகக் கட்டுப்பாடுகளைத் தளர்த்துவது குறித்து சிந்திப்பது சாலச் சிறந்ததாகும் என்றும் இந்த மாநாட்டு விவாதங்கள் மூலம் தெரிய வந்தது.

மாநாட்டின் முடிவில் தமிழக முதலமைச்சர் மும்முனைத் திட்ட மொன்றை விளக்கினார்—

(1) பெரு நிலக்கிழார்களிடமிருந்து அதாவது, 10 ஏக்கரும் அதற்கு மேற்பட்டும் நிலங்களை வைத்திருக்கும் நிலக்கிழார்கள் விற்பனைக்காக வைத்துள்ள உபரி இருப்பு முழுவதையும் கொள்முதல் செய்யும் அளவில் கொள்முதல் வேலை மும்முரமாக்கப்படவேண்டும். ஒரு ஏக்கரும் அதற்குக் குறைவாகவும் நிலம் வைத்துள்ள குடியானவர்களுக்கு கொள்முதலினின்றும் முழுவதும் விலக்கு அளிக்கப்பட வேண்டும். இடையிலுள்ள பிற குடியானவர்களிடமிருந்து இது குறித்து முடிவு செய்யப்பட்டுள்ள அளவு கொள் முதல் செய்யப்படவேண்டும்.

(2) பதுக்கல் வேலையும், கடத்தல் வேலையும் அறவே ஒழிக்கப்பட வேண்டும். இதற்காக அவசியமானால் அரசு இன்னும் அதிகமான அதிகாரங்களை மேற்கொள்ளும்.

(3) உணவுப்பொருள் உற்பத்தியில் தன்னிறைவு நிலை ஏற்பட்டுவிட்டால் மட்டும் போதும் என்ற வகையில் அல்லாது எவ்வளவு குறுகிய காலத்தில் முடியுமோ அவ்வளவு குறுகிய காலத்தில கணிசமான அளவுக்கு உபரி இருப்பு இருக்கும் வகையில் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க மும்முரமாக முயற்சி செய்யப்படவேண்டும்.

இவ்வாறாக, ஏழை மக்களுக்குத் தங்களது வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டுமென்றால் கொள்முதல் வேலை தொடர்ந்து நிறை வேற்றப்பட வேண்டுமென்று இவ்வேலையில் சம்பந்தப்பட்ட அனைவருக்கும்—உற்பத்தியாளருக்கும், உணவுப்பொருள் வழங்கு துறை அதிகாரிகளுக்கும்—அரசு திட்டவட்டமாக அறிவித்தது.